

## சாமர்த்தியமாக இருங்கள்

# போலியான செய்திகள் பற்றிய விளைவுகளை அறிந்துகொள்ளுங்கள்

## இணையத்தில் சரியானதைக் கடைப்பிடியுங்கள்

- **செய்தி தோன்றுவதற்கான அடிப்படை (மூலம்)** பற்றிக் கேள்வி கேளுங்கள்
- **தகவலை** உறுதிப்படுத்துங்கள்
- **நிபுணர்களுடன்** சரிபாருங்கள்

**CHECK Please!**

Be Safe. Be Smart. Be Kind.



MediaLiteracyCouncilSG

www.betterinternet.sg



NLB National Library Board Singapore | MEDIA LITERACY COUNCIL | INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | SG:D GET READY!

## நாமும் நம்பி மற்றவர்களோடு பகிர்வதற்கு முன்பு,

# தயவுசெய்து சரிபாருங்கள்!

**போலியானவற்றை நம்புவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அறிந்து இணையத்தில் சாமர்த்தியமாக இருங்கள்.**

## 01 பயத்தை உண்டாக்குதல்

பொய்யான ஆபத்து பற்றிய செய்திகள் (எ.டு- ஒரு குறிப்பிட்ட வியாபார சின்னம் நச்சுத்தன்மைமிக்க உணவைத் தயாரிக்கிறது) மக்களிடையே பயத்தை உண்டாக்கலாம். உண்மையான அக்கறையின் பேரில் அவர்கள் நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும் தவறான செய்தியைப் பரப்பித் தேவையற்ற பரபரப்பை ஏற்படுத்தலாம்.

## 02 வளங்களை வீணாக்குதல்

கிடைத்த செய்தி நெருக்கடி நிலையை அல்லது குற்றச் செயலைப் பற்றியதாக இருந்தால் அதிகாரிகள் (எ.டு- காவல்துறையினரோ மற்றும் நெருக்கடி நிலை மருத்துவ சேவைகளோ) நிலைமையைச் சமாளிக்க தங்கள் மதிப்புமிக்க நேரத்தையும் ஆள்பலத்தையும் செலவிட வேண்டியிருக்கும்.

## 03 ஒருவருடைய நற்பெயரைக் கெடுத்தல்

ஒருவரைப் பற்றிய பொய்யான செய்தி பெருமளவு பரவினால், அது அவருடைய நற்பெயரைப் பாதித்து அவருடைய வாழ்க்கையில் கூடுதலான மோசமான விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

## 04 பணம் இழப்பீட்டை உண்டாக்குதல்

மோசடிச் சம்பவங்களாக உருபெரும் தவறான தகவல்கள், மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்தப் பணத்தை இழப்பதற்கு வழிவகுக்கலாம். மேலும் பணத்தைத் திரும்பப் பெறும் வாய்ப்பும் இருக்காது.

## 05 சமூக நல்லிணக்கத்தை அச்சுறுத்துதல்

இனம், மதம், நாட்டுரிமை மற்றம் இதர வேறுபாடுகளைப் பற்றிய தவறான தகவல்கள், மக்களிடையே பத்றறத்தை உருவாக்கி, அவர்கள் ஒருவரையொருவர் நடத்தும் விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தி நாட்டின் சமூக நல்லிணக்கத்துக்கு ஆபத்தை விளைவிக்கலாம்.

